# பதவி வெற்றிடங்கள்

## அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்
## சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு

பின்வரும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப தகுதி வாய்ந்த, காத்திரமான, சுய ஊக்கம் உடைய, அணியாக பணியாற்றும் பணி ஆர்வம் உடைய நபர்களிடமிருந்து அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் விண்ணப்பங்களை கோருகின்றது.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:

i. இலங்கைப் பிரஜையாகவும்
ii. பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும், தீவில் எப்பாகத்திலேனும் பணியாற்றவும் உடலியல், உளவியல் ரீதியில் தகுதி உடையவராகவும்
iii. சிறந்த நல்லொழுக்கம் உடையவராகவும்

இருக்க வேண்டும்.

### 1. பிரதிப் பொது முகாமையாளர்-திட்டமிடல் மற்றும் கொள்முதல் (HM 1-1)

**கடமைகள்:**

திட்டமிடல் மற்றும் கொள்முதல் பிரிவின் தலைவராகவும் திட்டமிடல் மற்றும் கொள்முதல் தொடர்பான சகல பணிகளிற்கு பொறுப்பாகவும் இருந்து பொது முகாமையாளருக்கும் நிறுவன தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளருக்கும் பொறுப்புகூறும் இவரது பணிகளாவன:

1. உற்பத்தி திட்டமிடல், மூலப்பொருட்கள், பொதியிடும் பொருட்கள் என்பவற்றை பட்டியலிட்டு வழங்குதல், சரக்கு கட்டுப்பாடு மற்றும் களஞ்சிய முகாமைத்துவம்

2. மருந்தாக்கலிற்கான மூலப்பொருட்கள், இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள் போன்றவற்றை ஒப்பந்த அடிப்படையில் இறக்குமதி செய்தல்

3. கடன் கடிதங்களை திறத்தல், ஏனைய வங்கி நடவடிக்கைகள், சுங்கத்தில் இருந்து பொருட்களை விடுவித்தலை கையாளுதல், சரக்கு அனுப்புதல், கடல்சார் காப்புறுதி, உள்ளூர் கொள்வனவுகளை கண்காணித்தல்

4. தரம் சார் பிரச்சினைகள், சரக்கு அகற்றல் ஆகிய விடயங்களில் கவனம் செலுத்துதல்

5. தற்போதைய சிறந்த உற்பத்தி நடைமுறைகளை செயற்படுத்த உதவுவதுடன் அ.ம.கூ. இன் தர முகாமைத்துவ கட்டமைப்பை கண்காணித்தலும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

(அ). (1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானம்/வர்த்தகம் /முகாமைத்துவம் அல்லது இந்த துறைக்கு சார்ந்த விடயப்பரப்பில் பெறப்பட்ட பொதுப்பட்டம்

அல்லது

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞானம் /வர்த்தகம் /முகாமைத்துவம் அல்லது அதற்கு சமமான துறையில் பெறப்பட்ட விசேட பட்டம்

அத்துடன்

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெறப்பட்ட வர்த்தகம்/முகாமைத்துவம்/விநியோக சங்கிலி முகாமைத்துவம் போன்ற துறைகளில் பெறப்பட்ட பட்ட மேற்படிப்பு (முதுமாணி) பட்டம்

அத்துடன்

(இ) மருந்தாக்கல்/உணவு தொடர்பான திட்டமிடல் மற்றும் கொள்முதல் துறையில் அரச/கூட்டுத்தாபனம்/சபை/நியதிச்சபை அல்லது நன்கறியப்பட்ட வர்த்தக நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவத்தில் குறைந்தது 12 ஆண்டுகள் பதவிக்கு பின்னான அனுபவம்

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

பதவிக்கு பொருத்தமான துறையில் முகாமையாளர் வகுதி (MM 1-1) தரம் I இல் திருப்திகரமானதொடர்ச்சியான ஆகக்குறைந்ததுஇரண்டு (2) வருட சேவை அனுபவம்

திருப்திகரமான ஆகக்குறைந்தது

**சம்பள அளவுத்திட்டம்:** HM 1-1 - ரூ. [140,640- 15 X 4,100 =202,140]

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 140,640/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 123,019/=**).

மேற்குறிப்பிட்ட சம்பளங்களுக்கு மேலதிகமாக, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

**வயது:** 35 வருடங்களுக்கு குறையாமலும் 55 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உச்சபட்ட வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறைமை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

**ஏனைய நலன்கள்:**

- கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படும் உத்தியோகபூர்வ வாகனம் அல்லது PED 1/2015(i) சுற்றறிக்கையின் பிரகாரம் சொந்த வாகனத்திற்கான கொடுப்பனவு
- எரிபொருள் கொடுப்பனவு (மாதத்திற்கு 120 லீட்டர்கள் டீசல் அல்லது பெற்றோல்)

## 2. மருந்தாக்க தொழிநுட்ப வல்லுநர்-திட்டமிடல் மற்றும் கொள்முதல் (JM 1-1 தரம் II)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால்  அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து விஞ்ஞானத்துறையில் பெறப்பட்ட இளமாணிப்பட்டம்

அத்துடன்

(ஆ) வழங்கல் மற்றும் சரக்கு முகாமைத்துவம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவகம் ஒன்றில் ஒரு வருட சான்றிதழ் கற்கைநெறியை பூர்த்தி செய்திருத்தல்

அத்துடன்

(இ) கணினி அறிவு

அத்துடன்

(ஈ) அரச திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபை/நியதிச்சட்டசபை அல்லது நன்கறியப்பட்ட வர்த்தக நிறுவனம் ஒன்றில் உள்நாட்டு/வெளிநாட்டு வழங்கல்கள் தொடர்பில் பதவிக்கு பின்னரான ஒரு வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

2. பதவிக்கு பொருத்தமான விடயப் பரப்பில் அதாவது 'முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பம் அற்ற/ தொழிநுட்ப  (MA 1-1/MA 2-1) தரம் II இன் ஒரு பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்:** JM 1-1 ரூ. [72,650-10 X 1,360-18 X 2,040= 122,970]

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 72,650/=அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 65,633/=).**

• **வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உச்சபட்ட வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது.

• **ஆட்சேர்ப்பு முறைமை:** எழுத்து மூலமான போட்டிப்பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

## 3. மருந்தாக்க தொழிநுட்ப வல்லுநர்-உற்பத்தி (JM 1-1 தரம் II)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து வாகடவியல், இயற்கை விஞ்ஞானங்கள் அல்லது பொறியியல் அல்லது அதற்கு சமமான துறையில் பெறப்பட்ட முதற்பட்டம்

அத்துடன்

(ஆ) கணினி அறிவு,

அத்துடன்

(இ) மருந்து உற்பத்தி துறையில் பதவிக்கு பின்னான ஒரு வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

2. பதவிக்கு பொருத்தமான விடயப் பரப்பில் அதாவது 'முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப (MA 2-1) தரம் II இன் ஒரு பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்:** JM 1-1 ரூ. [72,650-10 X 1,360-18 X 2,040= 122,970]

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 72,650/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 65,633/=).**

- **வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

உச்சபட்ட வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறைமை:** எழுத்து மூலமான போட்டிப்பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

## 4. உள்ளக கணக்காய்வு அலுவலர் (JM 1-1 தரம் II)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(அ) 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வர்த்தகம் அல்லது கணக்கியல் அல்லது வியாபார முகாமைத்துவம் அல்லது அதற்கு சமமான இளமாணிப்பட்டம்

அல்லது

2. இலங்கை பட்டயக்கணக்காளர்கள் நிறுவகத்தில் (ICASL) அல்லது இலங்கை முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவனத்தில் (CIMA) அல்லது சான்றுப்படுத்தப்பட்ட மற்றும் பெருநிறுவன கணக்காளர்கள் அமைப்பின் (ACCA) அல்லது தொழில்வாண்மை அமைப்பு

ஒன்றினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகம் ஒன்றில் பெறப்பட்ட இடைநிலை தரம் அல்லது சமமான தகைமை

அல்லது

3. அரச தொழிநுட்ப கல்லூரி ஒன்றில் கணக்கியல் துறையில் உயர் தேசிய டிப்ளோமா தகைமை

மற்றும்

(ஆ) கணினி அறிவு

மற்றும்

(இ) அரச திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபை/நியதிச்சட்டசபை/அல்லது நன்கறியப்பட்ட வர்த்தக நிறுவனம் ஒன்றில் கணக்காய்வு அல்லது கணக்கீட்டுத்துறையில் பதவிக்கு பின்னரான ஒரு வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

2. பதவிக்கு பொருத்தமான விடயப் பரப்பில் அதாவது 'முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பம் அற்ற/தொழிநுட்ப (MA 1-1/MA 2-1) தரம் II இன் ஒரு பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்:** JM 1-1 ரூ. [72,650-10 X 1,360-18 X 2,040=122,970]

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 72,650/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 65,633/=).**

- **வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

உச்சபட்ட வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறைமை:** எழுத்து மூலமான போட்டிப்பரீட்சை கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

5. **தரக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் - (JM-1-1 தரம் II)**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் அடங்கலாக ஒரு B.Sc பொது பட்டத்தை அல்லது இரசாயனவியலில் ஒரு விஷேட பட்டத்தை அல்லது அதற்கு இணையான ஒரு பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(a) கணனி பற்றிய அறிவு இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(b) பதவியின் பின்னர் மருந்தாக்க அல்லது உணவு தொழில்துறையில் ஓராண்டு கால அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

1 மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2 பதவிக்கு பொருத்தமான விடயப் பரப்பில் அதாவது ‘முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப (MA 2-1) தரம் II இன் ஒரு பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்**: JM 1-1 ரூ. [72,650-10x1,360-18x2,040= 122,970]

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 72,650/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 65,633/=**).

- **வயதெல்லை:-** 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
  உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.
- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

## 6. மருந்தாக்க தொழில்நுட்பவியல்- உற்பத்தி (MA -2-1 - தரம் III)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் - கீழுள்ள (a), (b) அல்லது (c)**

**(a)** மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு தொழில்நுட்ப/ வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் மருந்தாக்க துறைக்கு பொருத்தமாக வழங்கும் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை மட்டம் 5 இற்கு குறையாத ஒரு திறன் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

**(b)** (i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் பதவிக்கு பொருத்தமான விஞ்ஞான அல்லது தொழில் நுட்ப மூன்று (03) பாடங்களில் (பொதுப் பரீட்சை வினாத்தாள் தவிர) சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(iii) ஆறு மாதத்திற்கு குறையாத கணனி சான்றிதழ் பாடநெறி ஒரு மேலதிக தகைமையாக கருதப்படும்.

அத்துடன்

(iv) பிரபல்யமான ஒரு மருந்தாக்கல் நிறுவனத்தில் குறித்த துறைக்கு பொருத்தமான ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**(c) பயிலுநர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல்:-**

மேற்குறித்த (b) (i), (ii), (iii) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய பயிலுநர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தில் ஒரு மருந்தாக்க தொழில்நுட்பவியல் - தயாரிப்பு பயிலுநராக 1 ½ ஆண்டு கால உள்ளகப் பயிற்சியை பூர்த்தி செய்து எழுத்துமூல

பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மருந்தாக்க தொழில்நுட்ப தயாரிப்பாளராக நிரந்தர ஆளணியில் உள்ளீர்க்கப்படுவதற்கு முற்றகைமை பெற்றவர்களாக கருதப்படுவார்கள்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்**: MA 2-1 : ரூ. [50,540-10x540-7x 30-4x890-20x1,190=87,710]

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 50,540/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 46,960/=).**

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

**பக்க நன்மைகள்:**

- வரவு மற்றும் செயலாற்றுகை ஊக்குவிப்புத்தொகை
- பயன்படுத்தாத வருடாந்த மற்றும் சுகயீன லீவுகளை பணமாக்கல்
- மருத்துவக் காப்புறுதி கிடைத்தல் மற்றும் மருத்துவச் செலவுகள் மீளளிப்பு
- EPFஇற்கு சம்பளத்தின் 15% வீதம் கூட்டுத்தாபனத்தால் பங்களிக்கப்படுதல் மற்றும் 10% வீதம் ஊழியர்களால் பங்களிக்கப்படுதல்
- ETFஇற்கு சம்பளத்தில் 3% கூட்டுத்தாபனத்தால் பங்களிக்கப்படுதல்.
- 1983 இன் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைச் சட்டத்திற்கும், MSD சுற்றறிக்கைக்கும் இணங்க பணிக்கொடை செலுத்தப்படுதல்
- மேலும் ஏனைய பக்க நன்மைகள்

**பொதுவான அறிவுறுத்தல்கள்:**

- குறித்துரைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தைப் பயன்படுத்தி தயாரித்த விண்ணப்பங்கள் உறவினர் சாராத இரண்டு நடுவர்களின் பெயர்களையும், முகவரிகளையும் மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். எல்லாக் கல்வி சான்றிதழ்களினதும் சான்றுபடுத்தப்பட்டுள்ள பிரதிகள் விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் தனித்தனி கடிதவுறையில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் https://www.spmc.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து தரவுறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

- அரசாங்கத் திணைக்களங்களிலும் மற்றும் நியதிச்சட்ட சபைகளிலும் பணியாற்றுகின்ற ஊழியர்கள், இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அதற்கான நியமனத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் அவர்கள் விடுவிக்கப்படுவார்களா என்பதை சான்றுபடுத்த வேண்டிய தத்தமது நிறுவனத் தலைவர்களின் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

- விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை தாங்கிவருகின்ற கடித உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு கீழ்காணும் முகவரிக்கு இந்த விளம்பரத் திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

- மேற்குறித்த தேவைப்பாடுகளை அனுசரிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்**
இலக்கம் 11,சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை
கந்தவெல எஸ்ட்ரேட் – இரத்மலான
07.06.2026